
# அப்பாவின் பேனா!




அப்பாவின் கையெழுத்து அருமையாக இருக்கும். நன்றாக வரைவார். பள்ளியில் எனது அறிவியல் பாடத்தின் படங்களுக்கு எனக்கு கிடைக்கும் பாராட்டுகள் அப்பாவிற்கு சொந்தமானது.

அப்பாவின் பிரத்யேக பெட்டியில் வகை வகையான பென்சில்கள், பேனாக்கள், ஸ்கெட்ச் பேனாக்கள் என்று நிறையவே இருக்கும். அப்போதெல்லாம் அபூர்வமான ஹீரோ, பார்க்கர் பேனாக்கள் எல்லாம் வைத்திருப்பார். புத்தாண்டு, பொங்கல் சமயங்களில் நிறைய போஸ்ட் கார்டுகள் வாங்கி வந்து, பொறுமையாக வாழ்த்துக்கள் வரைந்து உறவினர்கள், நண்பர்கள் என்று தனித்தனியாக அனுப்புவார். உறவினர்கள், நண்பர்கள் பிறந்தநாள், திருமண நாட்களை நினைவு வைத்திருந்து தபால் அட்டையில் வாழ்த்துக்கள் வரைந்து அனுப்புவார்.

ஒரு வருடம், முழுப்பரிட்சை சமயம் அடம்பிடித்து ப்ரௌன் கலர் ஹீரோ பேனா ஒன்றை வாங்கிப் போயிருந்தேன். பரிட்சை முடிந்து மேலவீதி வழியாக திரும்பி வந்து கொண்டிருந்த போது சட்டையில் சொருகியிருந்த ஹுரோ பேனாவின் கீழ்ப்பகுதி எங்கேயோ விழுந்து விட்டது. அப்பா திட்டுவாரே என்ற பயத்தை விட நல்ல பேனாவை தொலைத்து விட்டோமே என்கிற பதட்டத்தில், பள்ளியிலிருந்து வந்த பாதையில் நானும் என்னுடன் வந்த நண்பனும் தேடித்தேடி களைத்தோம்.



வீட்டிற்குத் திரும்பி “பரிட்சை எப்படி எழுதினே?” என்ற அப்பாவிடம்,
“நீ கொடுத்த பேனாவின் இது மட்டும்தான் மிச்சம்”
என்று மூடியைக் காண்பித்தேன்.

அப்பா அமைதியாக, “இதை ஏன் சுமந்துட்டு வந்த அங்கேயே போட்டுட்டு வர வேண்டியதுதானே” யார் கண்ணிலயாவது அந்த பேனா கெடச்சா மூடியில்லாமா என்ன பண்ணுவாங்க”.என்றார்.

ஒரு பெரிய காட்சியை எதிர்பார்த்து கூடவே வந்த நண்பன் திகைத்துப்போனான்.

அப்பா ஒரு தீவிர வாசிப்பாளி. பெரும்பாலான பத்திரிகைகள் வீட்டிற்கே வரும். முத்துக்காமிக்ஸிலும், விகடன், குமுதம், கல்கண்டிலும்தான் என் மொழி வளர்ந்தது. 'மேதாவி' எழுதிய க்ரைம் கதைகள் அப்பாவின் ஃப்வேரைட். பிற்பாடு சுஜாதா.

அப்பா நல்ல சினிமாக்களின் ரசிகர். . படம் பார்த்து விட்டு வந்து எங்களுக்கு காட்சி விடாமல் கதை சொல்லுவார். லாரல் ஹார்டி, சார்லி சாப்ளின் இன்ன பிற இங்கிலீஷ் படங்கள், நல்ல இந்தி படங்கள் கும்பகோணம், தஞ்சாவூரில் ரிலீஸாகும் போது அழைத்து ச்செல்வார்.

கல்லூரி நாட்களில் ஒருமுறை வகுப்புக்கு 'கட்' அடித்து விட்டு, நண்பர்களுடன் தஞ்சாவூர் ராணிபேரடைஸில் 'Absent minded Professor's என்ற படத்துக்கு நண்பர்களுடன் சென்றிருந்தேன். படம் ஆரம்பித்த சில விநாடிகளில் என்னருகில் அமர்ந்திருந்த சரவணன் என் தோளைச்சுரண்டினான்.





“என்னடா ?”

“டேய் உங்கப்பாடா..” என்றான்.

மெதுவாக திரும்பிப் பார்த்தால், கடைசியிலிருந்து மூன்றாவது வரிசையில் அப்பா வே தான்.

இன்டர்வெலுக்கு சற்று முன்பாகவே எழுந்து இருளோடு இருளாக வெளியேறினோம். ஒருவேளை என்னை தியேட்டரில் வைத்து அப்பா பார்த்திருப்பாளோ என்ற சந்தேகம் இருந்தாலும், பயமெல்லாம் ஒன்றுமில்லை. காலேஜ் கட் அடித்து விட்டு சுற்றுகிறானே..என்று அப்பா வருத்தப்படுவாரோ என்கிற சங்கடம்தசங்கடம்தான்.

அன்றிரவு அப்பா வீடு திரும்பியதும் எந்த எதிர்வினையுமின்றி அமைதியாக சொன்னது இதுதான்:
“Obsent minded Professor” படம் இன்டர்வெலுக்கு பிறகுதான்டா அருமையாக இருந்தது”

அதுதான் அப்பா.

அப்பா ஒரு உணவுப் பிரியர். விடுமுறை நாட்களில் வீட்டில் நளபாகம்தான். அப்பாவின் கைமணத்தில் அசோகா அல்லாவும், ஜீரா போளியும் அருமையாக இருக்கும்.

அப்பாவுக்கு கோபம் வராது என்றில்லை. வந்தால் அதைக் காட்டும் விதமே வித்தியாசமாக இருக்கும். அமைதியாக இருந்து விடுவார். நாலு அடி அடித்து விட்டாலோ அல்லது திட்டி விட்டாலோ பரவாயில்லை என்றிருக்கும்.

சேது மாமா அடிக்கடி சொல்வார,
“எல.. உங்க அப்பன், பிள்ளேல தள்ளி நின்னுன்னு கூட சொல்ல மாட்டாம் போலருக்கேல”.

தனது தந்தையை ஐந்து வயதிலேயே இழந்ததாலோ என்னவோ தானறியா பாசத்தை நாங்களறிய தந்த அப்பா, உடனில்லாத ஆண்டுகள் பலவாகிவிட்டது. எனக்கும் தலைநரைத்து தாத்தா பதவியடைந்துவிட்ட இன்றும், சிலநேரங்களில் இனம்புரியாத ஏக்கமும் வெறுமையும் மனதையழுத்துகிறது. —0—

